ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2159/15 - 2020 ජනවාරි මස 22 වැනි බදාදා - 2020.01.22
*2159/15 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 (1) ஆம் உறுப்புரை மற்றும் 46 (1) (அ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2019, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 2153/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, உடனடியாக நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, சனவரி 21.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் இல. (12) "தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அவ்வறிவித்தலில் இல் (12) எனும் தலைப்பானது, "(12) தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I இல. 1 ஆவது விடயமானது,-

1. தகவல் மற்றும் வெகுசன ஊடகம் தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் நிரல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமும் கட்டளைகளுக்குரிய கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் ;

(இ) அதன் நிரல் I இல் 8 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம் ;

(ஈ) அதன் நிரல் I இல் 7 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(உ) அதன் நிரல் II இல் 3 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஊ) அதன் நிரல் II இல் 2 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்.

(2) அவ்வறிவித்தலில் இல. (1) "பாதுகாப்பு அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் 18 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் ;

19. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் மேம்பாட்டுக்காக குறிப்பிட்ட நிறுவனத்துடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் ;

(ஆ) அதன் நிரல் I இல் 19 ஆவது விடயத்லிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

(இ) அதன் நிரல் II இல் 26 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் ;

27. சகல தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் ;

(ஈ) அதன் நிரல் II இல் 27 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.